நாட்டுக் கோழிக் குஞ்சுகளால் முதல் இரண்டு முதல் மூன்று வாரங்கள் வரை சுயமாக உடல் வெப்பநிலையை பராமரிக்க இயலாது. இதனால் வெளியிலிருந்து வெப்பம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது. புறக்கடை முறையில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளில் தாய்க் கோழியானது தனது குஞ்சுகளை அவ்வப்போது தனது இறக்கைக்கு அடியில் அணைத்துக் கொள்ளுவதால் குஞ்சுகளுக்குத் தேவையான வெப்பம் கிடைக்கிறது. ஆனால் பண்ணை முறையில் அதிக எண்ணிக்கையில் கோழிகளை வளர்க்கும்போது குஞ்சுகளுக்கு வெளியிலிருந்து வெப்பம் அளிப்பது அவசியமாகிறது. இதற்காக செயற்கையான தூடேற்றுதல் அவசியமாகிறது.


கோழிக்குஞ்சுகள் உருவத்தில் மிகச்சிறியது (35 கி) மட்டுமின்றி முதல் 2 – 3 வாரம் வரை அவற்றால் சுயமாக உடல் வெப்பநிலையை பராமரிக்க இயலாது. இது மட்டுமின்றி குஞ்சுகள் பொரிக்கும்போது அவற்றின் உடலில் வெறும் ரோமம் போன்ற இறகுகள் மட்டுமே காணப்படும். படிப்படியாக இறகுகள் வளர்ந்து உடலை மூடுவதற்கு சுமார் 2 முதல் 3 வாரங்கள் தேவைப்படும். இந்த பருவத்தில் கோழிக்குஞ்சுகள் வெளிப்புற தட்பவெப்ப மாறுதல்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. இந்த காரணங்களால் அவற்றின் உடல் வெப்பநிலையை சீராக பராமரிப்பதற்கு வெளியிலிருந்து வெப்பம் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

செயற்கை அடைகாத்தல் (புரூடிங்):


இளம் குஞ்சுகளுக்கு தூடேற்றும் உபகரங்கள் மூலம் முதல் இரண்டு அல்லது மூன்று வாரம் வெளியிலிருந்து வெப்பம் அளிப்பதை 'புரூடிங்' என்று அழைக்கிறோம். இதற்காக அமைக்கப்பட்ட அமைப்பை 'புரூடர்' என்கிறோம். குஞ்சுகளுக்கு



நாட்டுக்கோழி குஞ்சுகள் பராமரிப்பு



அக சிவப்பு பல்புகள்



எரிவாயு புரூடர்.



கரி அடுப்பு புரூடர்.

வெப்பம் அளிப்பதற்காக மின்சார பல்புகள், அகசிவப்புக்கதிர் பல்புகள், மண்ணெண்ணெய் மற்றும் கரி அடுப்பு அல்லது எரிவாயு புரூடர் ஆகியவை உபயோகிக்கப்படுகிறது.


வட்ட வடிவ தட்டின் அடியில் பல பல்புகள் பொருத்தப்பட்ட 'ஹோவர்' என்ற அமைப்பும் பிரபலமாக பயன்படுத்தப்படும் ஒன்றாகும்.

ஹோவர் அமைப்பானது கூரையிலிருந்து கயிறு அல்லது கம்பி மூலம் கட்டப்பட்டு தரைக்குமேல் சுமார் ஒன்றரை அடி உயரத்தில் தொங்கவிடப்பட வேண்டும். அதைச்சுற்றி ஒன்றரை அடி இடைவெளிவிட்டு சுற்றிலும் தகடு அல்லது அட்டை போன்றவற்றாலான தடுப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த புரூடர் தடுப்புகள் சுமார் ஒன்றரை அடி உயரமுள்ளதாக இருக்க வேண்டும். கோழிக்குஞ்சுகள் புரூடர் அமைப்பை விட்டு சிதறி விடாமலிருக்க புரூடர் தடுப்பு உதவுகிறது.

தீவன பாத்திரங்கள் சக்கரத்தின் ஆரைகளின் வடிவில் புரூடரின் உள்ளே அமைக்கப்பட வேண்டும். இவ்வாறு அமைப்பதால் கோழிக்குஞ்சுகள் சூடு தேவைப்படும்போது ஹோவருக்கு அடியிலும் பின்னர் வெளியே எளிதில் வரவும் முடியும். தண்ணீர் கலங்கள் தீவன பாத்திரங்களின் இடையே ஹோவருக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும். தண்ணீர் மற்றும் தீவன பாத்திரங்கள் பல்புகளுக்கு நேர் கீழே அமைக்கக்கூடாது. ஹோவர் முறையில் புரூடர் அமைப்பை தயார் செய்யும் முறையை கீழ்கண்ட படத்தில் காணலாம்.

புரூடிங்கிற்காக பயன்படும் வெப்ப மூலங்கள்:

1. குண்டு பல்புகள்.
2. அக சிவப்பு பல்புகள்.
3. எரிவாயு புரூடர்.
4. மண்ணெய்ணெய் விளக்கு அல்லது கரி அடுப்பு.
5. மின்சார சூடாக்கி.




ஹோவர் முறையில் புரூடர் அமைத்தல்.

குஞ்சுகளைவிட கொட்டகைகளை தயார் செய்தல்:

ஒரு அணி கோழிகளை வளர்த்து விற்ற பின் அடுத்த அணி குஞ்சுகளை விடுவதற்கு முன்னர் கொட்டகைகளை நன்றாக சுத்தம் செய்து தயார் படுத்த வேண்டும். பழைய ஆழ்கூளத்தை முதலில் அப்புறப்படுத்திவிட்டு கட்டடத்தின் உட்புறத்தின் நாலாபக்கமும் நன்றாக துடைப்பத்தால் சுத்தம் செய்தல் வேண்டும். பின்னர் பிளீச்சிங் பவுடர் கலந்த தண்ணீரால் சுவர் மற்றும் தரை ஆகிய இடங்களை உராய்ந்து கழுவ வேண்டும்.

அதன்பின் கட்டடத்தின் உட்புற சுவர், தரை மற்றும் கூரையின் உட்புறம் நீற்றிய சுண்ணாம்பால் வெள்ளையடிக்க வேண்டும். கம்பி வலைகளை தீ உமிழ் துப்பாக்கியால் கிருமி நீக்கம் செய்ய வேண்டும். இதன் பின்னர் ஃபார்மலின் அல்லது வேறு ஏதாவது ஒரு கிருமி நாசினியை தெளிப்பான் உதவியுடன் தெளிக்க வேண்டும். இவை அனைத்தும் செய்த பின்னர் குறைந்தபட்சம் இரண்டு வாரங்களாவது கொட்டகையை வெற்றிடமாக வைத்திருக்க வேண்டும்.



புரூடர் அமைப்பு.

மேற்கண்ட முறையில் கொட்டகைகளை சுத்தம் செய்வதால் புதிதாக விடப்படும் குஞ்சுகளுக்கு நோயுண்டாக்கும் கிருமிகள் மற்றும் ஒட்டுண்ணிகள் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகள் குறைவதால் ஆரம்பம் முதலே நல்ல வளர்ச்சி திறனை அடைய முடியும்.

ஹோவர் முறையில் புரூடிங்:

குஞ்சுகள் வருவதற்கு ஒரு நாள் முன்னரே புரூடர் அமைப்பு நிர்மாணிக்கப்பட வேண்டும். முதலில் 5 சென்டி மீட்டர் உயரத்திற்கு ஆழ்கூழம் விரிவாக்கப்பட்டு அதன்மேல் இரண்டு அடுக்கு செய்தித்தாள் பரப்பப்பட்ட வேண்டும். அதற்கு மேல் நான்கு அடி விட்டமுள்ள ஹோவரை கூரையிலிருந்து தரைக்குமேல் ஒன்றரை அடி உயரத்தில் இருக்குமாறு தொங்கவிடவேண்டும். ஹோவரைச் சுற்றி ஒன்றரை அடி விட்டு புரூடர் தடுப்புகளை வட்டமாக அமைக்க வேண்டும். இந்த புரூடர் அமைப்பில் சுமார் 250 கோழிக்குஞ்சுகளை விட்டு வளர்க்கலாம். ஆறு அடி விட்டமுள்ள ஹோவரின் சுமார் 500 கோழிக் குஞ்சுகளை வளர்க்கலாம்.

குண்டு பல்புகளை உபயோகித்து புரூடிங்:

ஹோவர் அமைப்பு இல்லாத பட்சத்தில் பல்புகளை மட்டும் உபயோகிக்கலாம். இதற்காக புரூடர் தடுப்புகளை அமைத்து அதனுள் பல்புகளை தொங்கவிட வேண்டும். பொதுவாக 6 அடி விட்டமுள்ள புரூடர் காப்பானில் 300 குஞ்சுகள் வரை வளர்க்கலாம். அகசிவப்புக்கதிர் பல்புகள் அல்லது ஸ்பாட் பல்புகளின் மேற்புறம் எதிரொளிப்பான்கள் இருந்தால் இவ்வகை பல்புகளை உபயோகிக்கும்போது ஹோவர் அமைப்பு அவசியமில்லை.

ஒரு புரூடர் அமைப்பில் அதிக பட்சமாக 400 குஞ்சுகள் (7 அடி வட்டம்) வளர்க்கலாம். அதற்கு மேற்பட்ட குஞ்சுகளுக்கு வேறு புரூடர் வெப்பத்துக்காக 5 60 வாட் குண்டு பல்புகளை உபயோகிக்க வேண்டும். ஒரு குஞ்சுக்கு ஒரு வாட் கிடைக்க வேண்டும். 400 குஞ்சுகளுக்கு 6 முதல் 7 பல்புகளை உபயோகிக்கலாம். நான்கு பல்புகளை உபயோகிக்கும் போது 6 அடி நீளமுள்ள மரச்சட்டம் இரண்டை கூட்டல் குறி போன்று அமைத்து அதன் நுனியில் பல்புகளை கட்டி தொங்கவிட வேண்டும். இம்மரச்சட்டத்திற்கு மேல் அனைத்து பல்புகளுக்கும் மேலாக தகடாலான அமைப்பு ஏற்படுத்த வேண்டும். இதனால் பல்பிலிருந்து வரும் வெப்பம் மேற்புறத்திற்கும் சென்று வீணாகாமல் அனைத்து வெப்பமும் கீழ் பகுதி நோக்கியே செல்லும். ஆறு பல்புகள் உபயோகிக்கும் போது மூன்று மரச்சட்டங்கள் சக்கரத்தின் ஆரம் போல் கட்டி உபயோகிக்கலாம். இவ்வாறு புரூடரை தயார் செய்த பின்னர் குஞ்சுகளை விடுவதற்கு முன்னர் சுமார் 2 மணி நேரம் பல்புகளை எரியவிட வேண்டும்.

கரி அடுப்பு புரூடிங்:

மின்சாரம் சரிவர கிடைக்காத இடங்களில் கரி அல்லது மண்ணெண்ணெய் அடுப்புகள் மூலம் சூடு கொடுக்கலாம். இதற்கான தனித்துவமாக உள்ள மண் பானைகளில அடுப்புக் கரி கொண்டு தணல் மூட்டி, செயற்கை வெப்பம் அளிக்கலாம். இந்த அடுப்புகளின் மேல் இரும்பு தட்டுகளையும் சுற்றிலும் கம்பி வலையிலான தடுப்புகளையும் அமைப்பதால் குஞ்சுகளுக்கு நெருப்பினால் வரும் அபாயங்களை தவிர்க்கலாம்.


குண்டு பல்பை உபயோகித்தால் அவை வெப்பமும், வெளிச்சமும் தரும். ஆனால் கரி அடுப்போ அல்லது கேஸ் புரூடரிலிருந்து வெப்பம் மட்டுமே வரும். வெளிச்சம் வராததால் இவைகள் உபயோகிக்கும்போது பண்ணையின் கூரையில் ஒவ்வொரு 10 அல்லது 12 அடி இடைவெளியில் டியூப் லைட்டோ அல்லது குண்டு பல்போ அமைக்க வேண்டும். மேலும் பண்ணையின் பக்கவாட்டு பகுதியில் குளிர் காற்று உள்ளே வராமல் திரைச்சீலைகளை இறக்கிவிட வேண்டும்.

சமையல் எரிவாயு புரூடர்கள்:

சமையல் எரிவாயு புரூடர்கள் தரை மட்டத்திலிருந்து 3 முதல் 5 அடி உயரத்தில் அமைக்கப்பட வேண்டும். இவ்வகை புரூடர்களை உபயோகிக்கும் போது கொட்டகையினுள் முழுவதும் சூடேறும் வண்ணம் பக்கவாட்டில் திரைச்சீலைகள் கொண்டு மறைக்கப்பட வேண்டும்.

வெப்பமளித்தல்:

குஞ்சுகளுக்கு செயற்கை வெப்பம் காலநிலைக்கேற்ப 7 முதல் 14 நாட்கள் வரை அளிக்க வேண்டும். இவற்றில் முதல் 3 நாட்கள் வரை 24 மணி நேரமும் வெப்பம் அளிக்க வேண்டும். மூன்றாம் நாள் முதல் இரவில் மட்டும் வெப்பம் அளித்தால் போதும். பகலில் பொதுவாக தேவையில்லை என்றாலும் சூழ்நிலைக்கேற்ப தேவைப்பட்டால் வெப்பம் கொடுக்கலாம்.




குஞ்சுகளை வட்டத்திற்குள் விட்ட பின்னர் அவற்றின் செயல்பாடுகள் அனுசரித்து புரூடர் வெப்பநிலையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும். குஞ்சுகள் பல்புகளுக்கு அடியில் கூட்டமாக கூடியிருந்தால் அது அளிக்கப்படும் வெப்பம் குறைவு என்பதற்கான அறிகுறி ஆகும். இதை சரி செய்ய பல்புகளின் உயரத்தை குறைக்கவோ, பல்புகளின் வாட் அளவை அதிகரிக்கவோ அல்லது அதிக எண்ணிக்கையில் பல்புகளை உபயோகிக்கவோ செய்யலாம். மாறாக குஞ்சுகள் புரூடர் வளையத்திற்கு அருகாமையில் வட்டமாக சிதறியிருப்பது புரூடரினுள்ளே வெப்பம் தேவைக்கு அதிகம் என்பதன் அறிகுறி ஆகும்.

இதை சரிசெய்ய பல்புகளை உயர்த்திக் கட்டவோ, பல்புகளின் வாட் அல்லது எண்ணிக்கையை குறைக்கவோ செய்யலாம். குளிர்ந்த காற்று வீசுவதால் சமச்சீரற்ற வெப்பநிலை நிலவினால் குஞ்சுகள் புரூடர் தடுப்பாணை ஓட்டி ஓரிடத்தில் கூட்டமாக குழுமியிருக்கும். இதை சரிசெய்ய திரைசீலை கொண்டு கொட்டகையின் பக்கவாட்டில் மறைக்க வேண்டும். மழைக்காலங்களில் முக்கியமாக இரவு நேரங்களில் இது மிகவும் அவசியம். சரியான வெப்பம் கிடைக்கப்பெறும் புரூடரில் உள்ள குஞ்சுகள் சீராக பரவியிருப்பதுடன் சில குஞ்சுகள் ஓடியாடி தீனி மற்றும் தண்ணீர் உட்கொள்ளுவதையும் மற்றவை அமைதியாக ஓய்வு எடுப்பதையும் காணலாம்.


கொட்டகைகளில் இரண்டு புறமும் நீளவாக்கில் பக்கங்களும் தாப்பாய் அல்லது

பிளாஸ்டிக் விரிப்பு கொண்டு அடைப்பதால் இரவு நேரங்களில் முக்கியமாக குளிர் காலங்களில் குஞ்சுகளுக்கு சுற்றுப்புற வெப்பநிலை ஏற்றத்தாழ்வுகளிலிருந்து பாதுகாப்பு அளிக்க இயலும்.


பொதுவாக குஞ்சுகளின் மட்டத்தில் முதல் வாரத்தில் 95 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பநிலை கொடுக்கப்படவும் தொடர்ந்து இதிலிருந்து வாராவாரம் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் குறைக்கப்படவும் வேண்டும்.




அதிக வெப்பம்



குறைவான வெப்பம்



சமச்சீரற்ற வெப்பம்



சுரியான வெப்பம்

முதல் மூன்று நாட்கள் இரவு பகலாக தொடர்ந்து அதன் பின்னர் தேவைக்கேற்ப மழைக்காலங்களில் இரவு பகலாக அல்லது வெயில் காலங்களில் இரவு மட்டும் பல்புகளை எரியவிடவேண்டும். இரண்டு வாரங்களுக்கு பின்னர் காலநிலைக்கேற்ப தேவைப்பட்டால் மட்டும் வெப்பம் அளிக்கலாம்.

ஒளி மேலாண்மை:

முதல் நாளிலிருந்தே இரவு நேரங்களில் அரை மணி நேரம் பல்புகளை அணைத்து இருட்டு அளித்து கோழிக்குஞ்சுகளுக்கு இருளை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால் திடீரென மின்சார துண்டிப்பு ஏற்படும் போது கோழிக்குஞ் சுகள் பயத்தில் புரூடரினுள் அங்குமிங்கும் ஓடி மோதிக் கொள்வதை தவிர்க்கலாம்.

புரூடரில் விரிக்கப்பட்ட செய்தித்தாளை நான்காவது மற்றும் ஏழாவது நாட்களில் மாற்றி புதிய செய்தித்தாள் விரிக்க வேண்டும். சுமார் 10 நாட்களுக்கு பிறகு குஞ்சுகளை நேரடியாக ஆழ்கூளத்தின் மேல் விடலாம். 7 நாட்களுக்குப் பின்னர் புரூடர் காப்பானின் வட்டத்தை சற்று அகலப்படுத்தி இடவசதியை அதிகப்படுத்த வேண்டும். இரண்டு வாரங்களுக்குப் பிறகு படிப்படியாக அதிகப்படுத்த வேண்டும். வளர்ச்சி அதிகமாகும்போது அளவில் பெரிய தீவன மற்றும் தண்ணீர் பாத்திரங்களை உபயோகிக்க வேண்டும்.

தீவன மேலாண்மை:

குஞ்சுகள் பண்ணையை அடைந்தவுடன் முடிந்தால் ஒவ்வொரு குஞ்சாக எண்ணி தண்ணீரில் அலகைத் தொட்டு புரூடர் அமைப்பில் விடவேண்டும். குஞ்சுகளுக்கு முதலில் தீவனத்தை, தீவனத் தொட்டியில் அளிக்கத் தேவையில்லை. அதற்கு பதிலாக ரவை மற்றும் குஞ்சு தீவனத்தை செய்தித் தாளின் மேல் தூவி விடவேண்டும். ஒரு நாளுக்கு பின்பு தீவனத்தை தீவனத்தொட்டியில் நிரப்பி வைக்க வேண்டும். அவ்வாறு வைக்கும்போது ஒவ்வொரு தட்டையும் ஒவ்வொரு குடிநீர் தொட்டிக்கு நடுவில் வைக்க வேண்டும். இதனால் குஞ்சுகள் எங்கு திரும்பினாலும் தீவனமும், தண்ணீரும் எளிதில் கிடைக்கும்.

குடிநீர் மேலாண்மை:

தண்ணீரை கொதிக்க வைத்த பின்பு ஆற வைத்து அதை குஞ்சுக் குடிநீர் கலனில் இட்டு புரூடர் அமைப்பில் மேல் குஞ்சுகள் வருவதற்கு சற்று முன் பேப்பரின் மேல் வைக்க வேண்டும். முதன் முதலாக பயன்படுத்தும் தண்ணீரில் லிட்டருக்கு 8 கிராம் என்ற அளவில் குளுக்கோஸ் அல்லது சர்க்கரையை சேர்த்துக் கொடுக்க வேண்டும். அத்துடன் ஆண்டிபயாடிக் மருந்தையும் 'பி' வைட்டமின்களையும்

சேர்த்து கொடுக்கலாம். ஆண்டிபயாட்டிக் மருந்தை முதல் மூன்று நாட்களுக்கு தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

ஆ. கூண்டுமுறை பராமரிப்பு:

கூண்டுகளை புரூடிங்கிற்காக தயார் செய்யும்போது முதலில் பிளீச்சிங் பவுடர் கலந்த தண்ணீரால் சுத்தமாக உரசி சுத்தம் செய்தபின்னர் தீஉமிழ துப்பாக்கி, கிருமிநாசினி தெளிப்பு ஆகியவற்றின் மூலம் கிருமி நீக்கம் செய்ய வேண்டும். பின்னர் அடியில் செய்தித்தாள் விரிக்க வேண்டும். பின்னர் கூண்டினுள் பொருத்தப்பட்ட பல்பை எரியவிட வேண்டும். நிப்பிள் எனப்படும் தண்ணீர் குழாய்களின் உயரத்தை குஞ்சுகளுக்கு எட்டும் வண்ணம் சரிசெய்ய வேண்டும். நீள அல்லது வட்டவடிவிலான தீவன பாத்திரம் ஒரு கூண்டிற்கு இரண்டு என்ற விகிதத்தில் வைக்கப்பட வேண்டும். கடுமையான வெயில் காலங்களில் முதல் ஒன்றிரண்டு நாட்களுக்கு



நிப்பிளில் தண்ணீர் கொடுப்பதுடன் வட்டவடிவ கப் தண்ணீர் கலன் ஒரு கூண்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் உபயோகிக்க வேண்டும்.

முனைவர் ரி. ரிட்சார்ட் சர்ச்சில்,
முனைவர் ப.கனகராஜீ, முனைவர் கு.சீனிவாசன்,
பேராசிரியர்கள், கோழியின அறிவியல் துறை,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை-600007.

குடும்ப வாரிசு டெபாசிட் சிவப்பு சந்தன மரம், ஏக்கருக்கு ஒரு கோடி, மரம் ரத்த கலர் வரும், ஜூலிங்குனியா ஒட்டு சவுக்கு தைலக்கன்று 120 டன் 6 லட்சம், மலைவேம்பு 4 வருடத்தில் 10 லட்சம் தென்னை 3 வருடத்தில் 3 அடி உயரத்தில், வருடம் 480 தேங்காய், எலுமிச்சை குமிழ் தேக்கு, பர்மா தேக்கு அனைத்தும் Whatsapp-ல் பார்க்கலாம்.

வீட்டுக்கு லட்சம் லட்சமா பணம் தரும் மரங்கள்:

✪ அவரவர் நிலத்தில் உள்ள மண்ணையும், கிணற்றில் உள்ள நீரையும் நேரில் பார்த்த பின்புதான் மரக்கன்று தரப்படும்.

உங்களின் பேராதரவுடன் 30ம் வருடம்:

✪ தனியாரை ஊக்குவிக்க சந்தன மரம் வளர்க்க அரசு ஆணை 2014ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏலம் விட்டதில் அரசுக்கு ரூ.991 கோடி வருமானம். சந்தன மர வளர்ப்புத் திட்டத்தை தமிழ்நாடு அரசு 2002ம் ஆண்டு கொண்டு வந்தது. (T.N.Gazette Notification No.582 dt 03.09.2002Act No.33 of 2002) தனியார் வளர்க்கும் சந்தன மரங்களை வெட்டி அரசுக்கு கொடுக்கலாம். G.O.Ms.No.140 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை தேதி 27.11.2008 ஒரு டன் ரூ.25 இலட்சம் ஏலம், 2014 டிசம்பரில் 4 ஆயிரத்து 160 டன் ஏலம்.

✪ சிவப்பு சந்தனம் டன் ஒன்றுக்கு சீனாவில் 50 கோடி, சிவப்பு சந்தனத்துக்கு சர்வதேச சந்தை நிர்ணயம் செய்துள்ள ரேட் டன் ஒன்றுக்கு 20 கோடியில் ஆரம்பித்து 30 கோடியில் முடிகிறது. அதுவே மறுபேச்சு பேசாமல் சீனாவில் 50 கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப்படுகிறது. சந்தன மரம் சாகுபடி திரு.துரைசாமி சகோதரர்கள் 40 ஏக்கரில் ஐயம்பாளையம் திண்டுக்கல் திரு.வி.எம்.மூசா 3000 சந்தன மரம். 5 ஏக்கர் குட்டை ரக ஒட்டு தென்னையுடன் குழந்தைவேலு குத்தகை வருட வருமானம் 10 லட்சம். ஒரு ஏக்கருக்கு 108 தென்னை மரம் ஒரு வெட்டுக்கு 8000 தேங்காய். வருடம் 6 வெட்டுக்கு 48,000 காய். ஒரு தேங்காய் ரூ.15 வீதம் 4 லட்சம், தென்னை ரெண்டு மூணு ஆண்டிலேயே காய்ப்புக்கு வந்துருது. குனிஞ்சு பார்க்குற அளவு தேங்காய் வளர்ச்சி இருக்கு. தென்னை நட்டுட்டா, பல ஆண்டு வருமானம்.

✪ எலுமிச்சை கன்று 4 அடி உயரம் தரப்படும். எலுமிச்சை கன்று நடவு செய்ததில் இருந்து 2 வருடம் காய் காய்க்க ஆரம்பித்து 5வது வருடத்துக்கு, ஜூனில் நல்ல காய்ப்பு இருக்கும்.

✪ திருநெல்வேலி அந்தோணி 10 ஏக்கரில் எமிலுமிச்சை செடிகள் மூலமே ஆண்டுக்கு ரூ.10 லட்சம் வருமானம். சின்னச்சாமி ஜெயபாரதி ஒரு ஏக்கர் எலுமிச்சை செடிகள் மூலம் ஜூனில் ஆண்டுக்கு 2 லட்சம் வருமானம். மரபணு பர்மா தேக்கு 20 வருடத்திற்கு பிறகு 40 லட்சம் சுபராஜ் 5 ஏக்கரில். குமிழ் மரம்: 6 வருடம் கழித்து 20 குமிழ் மரம் வெட்டியதில் ரூ.1,48,000/- வருமானம்.

✪ வேங்கை, குமிழ், மகோகனி மரம்: 10 வருடத்தில் 25 இலட்சம். சவுக்கு மரம்: பாரதிபுரம் தனபதி இறவையில் 20 ஏக்கரில் சவுக்கு மரம் இப்போது உள்ளது. ஒரு டன் உருட்டு 8000.

இந்தியா HI-TECH இந்தியா
95 குட்டக்கரை மேடு, துறையூர் (Tk & Po)
திருச்சி(Dt). செல்: 99423- 91945
99761 25713, 99425 17457